Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 284/2023** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **ரவிசந்திரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் .**

**03.09.2025**

**முதல் விசாரணை:**

1. நான் அருப்புக்கோட்டை பத்திரம் சவுண்டையா தெருவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் மற்றும் 1வது எதிரி அருண்குமாரை தெரியும். அவர்கள் அசா.1 பரமேஸ்வரன் வீட்டின் அருகில் குடியிருந்து வருகிறார்கள். அசா.1 பரமேஸ்வரனை பார்த்து எதிரிகள் இருவரும் குடிபோதையில் அடிக்கடி தகராறு செய்து திட்டி வருவது வழக்கம். இந்நிலையில் கடந்த 17.09.2023 அன்று மாலை 07.00 மணியளவில் குடிபோதையில் பரமேஸ்வரனின் காம்பவுண்டு சுவரை சந்திரசேகர் என்பவர் உடைத்தார். நான் அந்த இடத்தில் இருந்தே பார்த்தேன். 24.09.2023 அன்று மதியம் 01.30 மணியளவில் அருண்குமார் என்பவர் பரமேஸ்வரனுக்கு சொந்தமான XL Super இருசக்கர வாகனத்தை குடிபோதையில் தள்ளிவிட்டார். இந்த சம்பவத்தின்போது நான் கடையில் இருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தை தள்ளிவிடும்போது நேரில் பார்த்தேன். அவரது இருசக்கர வாகனத்தின் சில பாகங்கள் உடைந்துவிட்டது. அருண்குமார் மதுபோதையில் இருந்ததால்

அப்போது அவரிடம் பேச இயலவில்லை. பரமேஸ்வரன் மற்றும் அவரது மனைவி இருவருமே வீட்டில் இல்லை. எனவே அவர்களுக்கு மொபைல் போன் மூலம் அழைத்து தகவலை சொன்னேன். அவர் வந்தபிறகு அவருடன் சேர்ந்து அருப்புக்கோட்டை நகர் காவல்நிலையத்திற்கு சென்று பரமேஸ்வரன் புகார் கொடுக்கும்போது நானும் உடன் இருந்தேன். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தங்கசாலை தெருவில் நகை கடை வைத்துள்ளேன். அசா.1 எனது நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். எதிரிகள் எனக்கு சொந்தமா என்றால் இல்லை, ஆனால் அவர்களை எனக்கு தெரியும். எதிரி அருண்குமாரின் மனைவியை அசா.1 அசிங்கமாக திட்டி ஆபாசமாக பார்த்து வந்த காரணத்தினால் 1வது எதிரிக்கும் அசா.1க்கும் அடிக்கடி பிரச்சனை நடந்தது என்றால் சரியல்ல, அசா.1 ஒழுக்கமான நபர் அவ்வாறு நடக்கமாட்டார். எதிரிகள் அசா.1னின் சுற்றுசுவரை அடித்து உடைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, நான் நேரடியாக பார்த்தேன். பொதுவாக மதியம் எத்தனை மணிக்கு உணவு அருந்துவதற்காக வீட்டிற்கு செல்வேன் என்றால் மதியம் 01.30 மணி முதல் 02.30 மணியளவில் செல்வேன்.

2. அசா.1 வீட்டில் இருந்து எனது வீடு எத்தனை வீட்டை அடுத்து உள்ளது என்றால் 3 வீடு தள்ளி உள்ளது. 2வது எதிரி இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியதாக கூறும் சமயத்தில் அருகில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் மதிய வேளையில் சாப்பிட வரும்போது இருசக்கர வாகனமானது கீழே விழுந்து கிடந்தது என்றால் சரியல்ல, 1வது எதிரி அருண்குமார் தான் வண்டியை தள்ளிவிட்டார் அதை நான் பார்த்தேன், 2வது எதிரி சந்திரசேகர் சுற்று சுவரை சேதப்படுத்தினார். அசா.1 எனது நண்பர் என்ற காரணத்தினால் அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**